தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

பேச்சுப் போட்டி 09-06-2018 ஆண்டு:- 2

அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்

**பூக்களின் சிறப்பு**

இன்று நான் பேச எடுத்துக்கொண்ட விடயம் பூக்களின் சிறப்பு.

பூக்களின் புன்னகைபோல் பூத்திடுவோமே என்று ஒரு புலவர் கூறினார்.

பூக்களை மலர்கள் என்றும் கூறலாம். இவை மரம், செடி, கொடியில் மலர்கின்றன. சில பூக்கள் நீரிலும் பூக்கின்றன. பூக்கள் கண்ணைக் கவரும் பல நிறங்களிலும் பல வடிவங்களிலும் உள்ளன.

பூக்கள் நல்ல மணம் தருவதுடன், இனிய தேனையும் தருகின்றன. நாம் உண்ணுவதற்கு காய் கனிகளை தருகின்றது. கடவுளை மலர்கள் சாத்தி வழிபடுகின்றோம். பெண்களின் கூந்தலை அழகுபடுத்த பயன்படுத்துகின்றோம். பூக்களின் பயன்பாடு அளவிடமுடியாது. ஆகவே நாங்களும் பூ மரங்களை நாட்டி பயனடைவோமாக.

நன்றி , வணக்கம்